தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994 மார்ச் 17, வியாழக்கிழமை

பங்குனி 3, ஸ்ரீமுக—திருவள்ளுவர் ஆண்டு-2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்''

ஒருவர் அறம் செய்யாது இருந்தது ஒரு நாள் கூட இல்லை எனும் அளவுக்கு நன்மைகளையே செய்து வருவாரானால், அதுவே அவர் வாழ்நாளில் அவருக்குத் தீமை ஏற்படுத்தக்கூடிய வழியை அடைக்கும் கல்லாகும்.

(1) இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. கே. சண்முகம் அவர்கள் 22-10-1993 அன்றும், திரு. கே. பொக்கை கவுடர் அவர்கள் 9-1-1994 அன்றும், திரு. சித. சிதம்பரம் அவர்கள் 16–1–1994 அன்றும், திரு. மு. சுந்தரராஜன் அவர்கள் 30–1–1994 அன்றும், திரு. டி. முத்துக்குமாரசாமி நாயுடு அவர்கள் 9–2–1994 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. சண்முகம் அவர்கள் 1953ஆம் ஆண்டு முதல் 1957ஆம் ஆண்டு வரை விருதுநகர் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. பொக்கை கவுடர் அவர்கள் 1946 ஆம் ஆண்டு முதல் 1951 ஆம் ஆண்டு வரை நீலகிரி பொது ஊரகத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. சி.த. சிதம்பரம் அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரையிலும் அன்றைய இராமநாதபுரம் மாவட்டம் காரைக்குடித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு போற்றுதலுக்குரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. மு. சுந்தரராசன் அவர்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரையிலும் இராமநாதபுரம் மாவட்டம், விருதுநகர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. டி. டி. முத்துக்குமாரசுவாமி நாயுடு அவர்கள் 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை தென்னாற்காடு மாவட்டம், திருக்கோயலூர் (பொது) தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே, பணியாற்றியுள்ளார். மேலும், 1957 ஆம் ஆண்டு முதல் 1961 ஆம் ஆண்டு வரை மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்திய அப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்)

முற்பகல் 10-05

(2) இரங்கல் தீர்மானம்.

காஞ்சி காமகோடி பீடாதிபதி அருள்திரு சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் அவர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரங்கல் தீர்மானம். கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தைப் பேரவை முன்வைக்கிறேன்:

"காஞ்சி மாமுனிவர் எனவும், காஞ்சிப் பெரியவர் எனவும், பரமாச்சார்யார் எனவும் அழைக்கப்பட்டு தெய்வீக சக்தியாகப் பலராலும் கருதப்பட்டு வந்த காஞ்சி காமகோடி பீடாதிபதி அருள் திரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்